# 10

# கிறிஸ்துவின் மந்தை

*"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும் " (யோவா. 10:16).*

*"... உங்களைக் குறித்தும் ... பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் " (அப். 20:28).*

பொறுப்புக்களினால் நான் மூழ்கடிக்கப்படும் பொழுது, ஊக்கம் குன்றிப் போன கடிகாரம் பற்றிய குழந்தைகளின் கதையை நான் சிந்திப்பதுண்டு. தாத்தா கடிகாரம் ஒன்று தான் ஒவ்வொரு ஆண்டும் துடிக்க வேண்டிய எண்ணிக்கையை கணக்கிட்டுப் பார்த்து, அந்த எண்ணிகை யானது அதற்குத் தள்ளாட்டம் கொடுப்பதாயிருந்தது. திகைப்பூட்டும் அந்தப் பெரிய எண்ணிக்கையை அது நினைத்துப் பார்த்த வேளையில் இனி துடிப்பதை விட்டுவிட வேண்டும் என்று அது முடிவு செய்யுமளவுக்கு அதிக சோர்வடைந்தது. அத்தனை தரம் தன்னால் துடிக்க முடியாது என்று அது முடிவு செய்தது. அதனுடைய நம்பிக்கையிழந்த நிலையைக் கண்ட சக கடிகாரம் ஒன்று அதனுடன் பேசத் தொடங்கிற்று. தாத்தா கடிகாரம் துடிக்க வேண்டியது ஒரு வேளையில் ஒரு நாள் மாத்திரமே, ஒருவேளையில் ஒரு மணி மாத்திரமே, ஒரு வேளையில் ஒரு நிமிடம் மாத்திரமே, ஒரு வேளையில் ஒரு துடிப்பு மட்டுமே அது துடிக்க வேண்டும் என்பதை நினைவு படுத்தச் சக கடிகாரம் அதற்கு உதவிற்று. அதனுடைய புத்தி மதியானது தாத்தா கடிகாரத்தின் சோர்வைக் குணப்படுத்திற்று. ஒரு வேளையில் ஒரு துடிப்பு மட்டுமே துடிக்க வேண்டும் என்ற உண்மையைச் சிந்தித்துப் பார்த்தலானது அதன் ஆவியை உயிர்ப்பித்தது, வாழ்க்கையைப் பற்றிய புதிய புறக் கண்ணோட்டத்தைக் கொடுத்தது, மற்றும் அது மீண்டும் துடிக்கத் தொடங்கும்படி ஏவிற்று.

நமது கர்த்தர், "ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34) என்று புத்திமதி கூறினார். வாழ்வு என்பது ஒரு வேளையில் ஒரே ஒரு நாள் மட்டுமே வாழப்படுகின்றது

என்பதை நினைவு படுத்திக்கொள்வதே சோர்வுக்கு ஒரு பரிகாரம் ஆகும்.

நீங்கள் பயம் நிறைந்தவராக இருக்கின்றீர்களா? தேவனுடைய மக்களை மேற்கொள்ளும் பொல்லாங்கின் மிகப் பெரிய வல்லமையைப் பற்றி நீங்கள் கவலைப்படுகின்றீர்களா? நாளைய தினம் எதனைக் கொண்டு வருமோ என்று நீங்கள் கவலைப்படுகின்றீர்களா? கர்த்தருக்கான உங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் நீங்கள் இடர்ப்பாடு அடைகின்றீர்களா?

இந்த பயங்களைப் பற்றியும் மற்றும் பல பயங்களைப் பற்றியும் விளக்கத்துடன் இயேசு யோவான் 10ல் எடுத்துரைத்தார். தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றி அவர் தம்முடைய மந்தை என்பதாகக் கூறினார் மற்றும், அவர்களுடனான தம்முடைய உறவை, ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளுடன் கொண்டுள்ள உறவுக்கு ஒப்பனையாகச் சித்தரித்தார். நீங்கள் பயம் நிறந்தோ அல்லது கவலைப்பட்டோ இருக்கும் பொழுது அவருடைய விளக்கத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அது “உலகத்திலிருக்கிற வனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்” (1 யோவா. 4:4) என்ற உணர் வறிவுடன் உங்களை ஆறுதல் படுத்தும். அது இயேசுவைப் பின்பற்றுபவர் பெற்றுக் கொள்ளும் மாபெரும் அன்பையும் அக்கறையையும் கூட உங்களுக்கு நினைவு படுத்தும்.

இயேசு எதிர்காலத்தில் தம் சபை என்று அழைக்கவிருந்த (மத். 16:18) தம் பின்பற்றாளர்களுடன் கொண்டிருக்கப் போகும் உறவுமுறையை எதிர்பார்த்திருந்த நிலையில், அந்த வேளையில் தம்மைப் பின்பற்றுபவர் களுடன் தம் உறவு முறையைப் பற்றிப் பேசுவதற்கு இந்த விளக்கத்தைப்[1] பயன் படுத்தினார். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தனது உயிரையே கையளிப்பதை இந்த ஒப்பீடானது சித்தரிக்கின்றது (யோவா. 10:15, 17, 18). இது இயேசு சிலுவையில் அறையப் படுதல் பற்றிய ஒரு நேரடிக் குறிப்பாக உள்ளது, அந்தச் செயலின் வழியாகவே அவர் சபையைக் கிரயம் கொண்டார் (அப். 20:28; எபே. 5:25). அவர் தம்மிடம் வரவிருந்த மற்ற ஆடுகளைப் பற்றிப் பேசினார்: “இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்” (யோவா. 10:16). இன்றைய நாட்களில் சபையானது கிறிஸ்துவின் மந்தையாகக் காணப்படுதல் வேண்டும் என்று இந்த வசனங்கள் நமக்குக் காண்பிக்கின்றன.

சபையை அவருடைய மந்தையாகச் சிந்தித்தல் என்பது கிறிஸ்து தம்முடைய சபைக்குச் செய்திருக்கின்றதை நாம் பாராட்டக் காரணமாகும். ஆகையால், நாம் “கிறிஸ்துவின் மந்தையாகிய சபையுடன் அவருக்கு உள்ள உறவுமுறை என்ன? மேய்ப்பன் என்ற வகையில் கிறிஸ்து தம்முடைய சபைக்குச் செய்வது என்ன?” என்று கேட்போமாக.

## கிறிஸ்து சபைக்குக் கர்த்தராக இருக்கின்றார்

கிறிஸ்து சபைக்குக் கர்த்தராயிருக்கின்றார் என்பதே இந்த ஒப்பீட்டின் மூலமாகத் தெளிவாகின்ற முதல் சத்தியமாக உள்ளது. இயேசு தம்மை

ஒப்பிட்டுக் கூறும் மேய்ப்பன் ஆடுகளின் சொந்தக்காரனாக இருக்கின்றான்; இவர் (இயேசு), மந்தையின் இராஜரீக ஆளுநராக இருக்கின்றார்.

மந்தைக்குள் பிரவேசிக்கும் எவரும் கிறிஸ்துவின் உடைமையாகி விடுகின்றார், இது ஆடு என்பது மேய்ப்பனின் சொந்த உடைமையாயிருப் பதைப் போன்றதாகும். உரிமைத்துவம் என்ற கருத்தானது இரண்டு திசைகளில் செல்லுகின்றது: முதலாவது இது, ஆடுகள் மேய்ப்பனுக்காக உயிர் வாழ்கின்றன என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது. நாம் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள்/கிறிஸ்துவுக்குரியவர்கள் என்பதால், நாம் கிறிஸ்துவின் ஊழியர்களாய் இருக்கின்றோம் (பிலி. 1:1). இரண்டாவது இது, மேய்ப்பன் ஆடுகளுக்காக உயிர் வாழ்கின்றான் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. ஆடுகளின் சொந்தக்காரன் என்ற வகையில், மேய்ப்பன் ஆடுகளின்மீது அன்புகூருகின்றான் மற்றும் அவைகளைப் பாதுகாக்கத் தேவையானவற்றை அளிக்கின்றான். உரிமைத்துவம் என்பது அத்துடன் ஒரு பாரமான பொறுப்பைக் கொண்டதாக உள்ளது, மற்றும் நல்ல மேய்ப்பன் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்றான்.

“பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின்மேல் அக்கறையாய் இருப்பது போல மற்றவர் எவரும் அவர்கள்மேல் அக்கறையாயிருப்பதில்லை” என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். இந்த உண்மைக்கான காரணம் தெளிவாக உள்ளது: பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தங்களுக்கே உரிய தனிச் சிறந்தவர்களாகப் புரிந்து உணர்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தனர்; அவர்கள் ஒரே மாம்சமும் இரத்தமும் கொண்டவர்களாய் இருக்கின்றனர்; அவர்களே அப்பிள்ளைகளுக்குப் பொறுப்பாளர்களாய் உள்ளனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளினால் அகம் மகிழ்ந்து, அவர்களுக்குத் தேவையானவற்றை அளித்து, அவர்களின் எதிர்காலத்திற்காகத் திட்டமிடுகின்றனர்.

தேவனுடைய வல்லமையுள்ள குமாரனான கிறிஸ்து தம் சொந்த மானவர்களுக்கு முற்றிலும் மற்றும் கனிவுடன் அக்கறை செலுத்துவார் என்பதில் நாம் நிச்சயமாய் இருக்க முடியும். நன்றி செலுத்தும் ஒரு சங்கீதத்தில் தாவீது தனது சரீரத் தேவைகளுக்கு தேவனுடைய தொடர்ந்த கவனிப்புக்கு நன்றி செலுத்தினார்: “நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை” (சங். 37:25). மலைப் பிரசங்கத்தில் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, ‘‘ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்” (மத். 6:31) என்று புத்தி கூறினார். இயேசு, “திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்; நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” (யோவா. 10:10) என்று கூறினார். நமது நல்ல மேய்ப்பர் நம்மை சொந்தமாகக் கொண்டுள்ளார், மற்றும் நமது சரீர, ஆவிக்குரிய தேவைகளை அவர் காண்கின்றார்.

இந்த சத்தியமானது நம்மை மிகப் பெரிய அளவில் (நன்முறையில்)

பாதிக்க வேண்டும். கிறிஸ்து நம்மை சொந்தமாகக் கொண்டுள்ளார் என்பது அவர் நமக்குப் பொறுப்பாளராய் இருக்கின்றார் என்று அர்த்தப்படுகின்றது. நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? நாம் ஏன் பயப்பட வேண்டும்? உங்களைக் கவனித்துக் கொண்டுள்ள நல்ல மேய்ப்பரின்மேல் நம்பிக்கையாய் இருங்கள். இயேசுவைக் கர்த்தரென்று பின்பற்றுவதே நமது ஒரே கட்டுப்பாடு ஆகும்; அவர் மற்ற எல்லாவற்றையும் கையாளுகின்றார்.

## கிறிஸ்து சபையை வழிநடத்துகின்றார்

இரண்டாவதாக, "நல்ல மேய்ப்பர்" என்ற ஒப்புமையானது கிறிஸ்து சபையை வழிநடத்துகின்றார் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றது. ஆடுகள் மேய்ப்பனைப் பின்பற்றுவது போல், சபையானது கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றது. நாம் அவரது குரலை அடையாளம் கண்டு அதற்குப் பதில் அளிக்கின்றோம். இயேசு பின்வருமாறு கூறினார்:

> மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனா யிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவி கொடுக்கிறது. அவன் தன்னு டைய ஆடுகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான் (யோவா. 10:1-3).

மேய்ப்பன் தனது ஆடுகளை ஒவ்வொரு இரவிலும், ஒரே ஒரு வாசலையுடைய சுவர்களால் அடைக்கப்பட்ட மாதிரியிலான பட்டியாகிய ஒரு பொதுவான தொழுவத்துக்குள் கொண்டு வருவான். அந்த வாசலில் வாயிற் காவலர் ஒருவர் இரவு முழுவதும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார். காலையில், மேய்ப்பன் அங்கு வந்து வாயிற்காவலனால் அடையாளம் காணப்படுவார். பின்பு அவர் அந்தத் தொழுவத்திற்குள் அனுமதிக்கப்பட்டு, தனது ஆடுகளைத் தன்னிடத்திற்கு அழைத்து, அவைகளை மேய்ச்சலுக்கு நடத்திச் செல்லுவான். ஒரு திருடனோ அல்லது கொள்ளைக்காரனோ தொழுவத்தினுள் செல்வதற்குச் சுவர் ஏறிக் குதிப்பான். அவன் வாயிற் காவலரால் அடையாளம் புரிந்து கொள்ளப்பட மாட்டான், மற்றும் தொழுவத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டான்.

மேலும் இயேசு, "அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்ட பின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின் செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம்" (யோவா. 10:4, 5) என்றும் கூறினார். காலையில் மேய்ப்பன் தனது ஆடுகளைக் கூட்டிச் செல்ல வருகையில், அவன் மந்தைக்கு முன்பாக நடந்து மட்டுமே சென்று அவைகளை அழைப்பான். அவனது ஆடுகள் அவனது குரலைக் கேட்டு

அவனிடத்திற்கு ஓடும். ஒரு ஆடு தொழுவத்தை விட்டுச் செல்லுகையில் மேய்ப்பனைத் தவிர அதற்குப் பாதுகாப்பு எதுவும் இருப்பதில்லை. அவைகள் பயமின்றிப் புல் மேயவும், இடையூறிலிருந்து விடுதலையாய் இருக்கவும் அவனையே முற்றிலுமாகச் சார்ந்துள்ளன.

மேய்ப்பன் தனது மந்தைக்கு எல்லா வகையிலும் எஜமானனாக இருக்கின்றான். அவன் வழி நடத்தும் இடங்கள் யாவற்றுக்கும் ஆடுகள் செல்லும். அவைகள் அவனுடைய வழி நடத்துதலின் கீழும், அவனுடைய ஞானத்தின் கீழும் இருந்தன. எல்லா விலங்குகளிலும், ஆடுகளே பண்பியல் பில் கீழ்ப்படிந்து பின்பற்றுபவைகளாக உள்ளன. அவைகள் திசை பற்றிய நல்லதொரு அறிவுணர்வு இல்லாதவைகளாய் உள்ளன. அவைகளின் சொந்த வழியில் விடப்பட்டால் அவைகள் விபத்துக்கள் நடக்கும் இடத்தையே நோக்குகின்றன. இருப்பினும், தக்க முறையில் வழிநடத்தப்படுகையில் அவைகள் நல்லதொரு வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்கின்றன.

இந்த வகையில் நாம் ஆடுகளைப் போல இருக்கின்றோம். வழி நடத்துதல் இல்லாத போது நாம், உதவிக்கரம் தேடித் தடுமாறும் பார்வையற்ற மனிதர்கள் போல இடறுகின்றோம். ஏசாயா, “நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம் ...” (ஏசா. 53:6) என்று எழுதினார். எரேமியா, “கர்த்தாவே, மனு ஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்” (எரே. 10:23) என்று கூறினார். நாம் சரியான வழி நடத்துதலைக் கொண்டிருக்க வேண்டும், இல்லையென்றால் துன்பம் நமக்காகக் காத்திருக்கின்றது.

---

*ஆடுகளுக்கு ஒரு நல்ல மேய்ப்பன் எப்படியிருக்கின்றாரோ,*
*அப்படியே நமக்கு இயேசுவும் இருக்கின்றார்*
*அவர் நம்மை நடத்துகிறவராகவும் நமது*
*வழிகாட்டியாகவும் இருக்கின்றார்.*

---

ஆடுகளுக்கு ஒரு நல்ல மேய்ப்பன் எப்படியிருக்கின்றாரோ, அப்படியே நமக்கு இயேசுவும் இருக்கின்றார் - அவர் நம்மை நடத்துகிறவராகவும் நமது வழிகாட்டியாகவும் இருக்கின்றார். அவர் சபைக்குத் தலையாகவும் (எபே. 5:23), நமக்கு மகிமையைக் கொண்டு வருகின்றவராக நமது இரட்சிப்பின் அதிபதியாகவும் (எபி. 2:10) இருக்கின்றார். அவரை நாம், “தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்பும்” (1 கொரி. 1:30) என்பதாகக் காண்கின்றோம். நமது திறமையின்மைகளைப் பற்றிய உணர்வுடையவர்களாயிருத்தல் மற்றும் நமக்குக் காரணமாயிருக்கின்றவர் பற்றிய உணர்வானது கிறிஸ்தவ இனத்தின் மையப் பணியான “விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி” (எபி. 12:1) என்பதை நாம் புரிந்துணரச் செய்கின்றது. நாம் அவரை நோக்கிக் கொண்டிருப்பது மட்டுமின்றி, அவரை நமது தலைவராகவும்

கர்த்தராகவும் நோக்குகின்றோம்.

ஏற்ற இறக்கங்களும், குறுகிய வளைவுகளும் மற்றும் கணவாய் போன்ற மேற்பகுதிகளும் உடைய மலைப்பாதைச் சாலையில், நள்ளிரவு வேளையில் கார் ஒன்றில் முன் விளக்குகள் இல்லாமல் அதை ஓட்டிச் செல்ல முயற்சிப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அப்படிச் செய்வதென்பது தற்கொலைக்குச் சமமானதாக இருக்கும். விபத்து ஒன்று தவிர்க்க முடியாததாகி விடும்; விபத்து எப்பொழுது எங்கு நடக்கும் என்பதை மட்டும் நீங்கள் அறியாதிருப்பீர்கள். இந்தச் சூழ்நிலையானது, பாவம் நிறைந்த ஒரு நபர், தெய்வீக வழி நடத்துதலின்றி இவ்வுலகில் தமது வழியில் செல்ல முயற்சிக்கும் செயலின் மிகச் சரியான ஒரு சித்தரிப்பாக உள்ளது. காரில் முன் விளக்குகள் இன்றி அதை அபாயகரமான சாலையில் ஓட்ட முயலும் நபரைப் போலவே இவர் அழிவை நோக்கி முன் செல்லுகின்றார்!

இருப்பினும், வாழ்வின் மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும், குழிகளிலும் மற்றும் கணவாய்களிலும் நமக்கு பயம் பற்றிக் கொள்ளாத படிக்குத் தம்முடைய ஆடுகளுக்கு தெய்வீக வழி நடத்துதலைத் தருவதாக இயேசு நமக்கு நிச்சயப்படுத்தியுள்ளார். இயேசுவை நமது முன்னோடி யாகக் கொண்டிருக்கையில் நாம் வாழ்வின் பயணத்தை மேற்கொள்ளுகை யில் ஒய்வாய் இருக்க முடியும்.

ஆப்பிரிக்கக் காடுகளின் பகுதியில் தங்கள் பயணத்தைத் தொடங்கிய வேட்டைக்காரர்களின் குழு ஒன்று தங்கள் வழிகாட்டியினிடத்தில், “உங்களிடம் வரைபடம் ஒன்றுள்ளதா?” என்று கேட்டனர். அதற்கு அவர், “நானே உங்கள் வரைபடமாய் இருக்கிறேன்!” என்று பதில் அளித்தார். இதுவே இயேசு தம்முடைய வசனத்தின் மூலமாக நம்முடன் ஏற்படுத்து கின்ற அவருடைய உறவாக உள்ளது. அவர் நமது வரைபடமாக உள்ளார்! “இயேசுவைப் பின்பற்றாமல் ஒருவர் அவர் கூறுவதைக் கேட்க முடியும், ஆனால் இயேசு கூறுவதைக் கேட்காமல் ஒருவர் அவரைப் பின்பற்ற முடியாது” என்று யாரோ ஒருவர் கூறினார். நாம் அவரது வசனத்தைக் கவனித்து, அவரைப் பின்பற்றுகின்றோம்.

இலக்கு அமைப்பதில் நாம் மிகவும் வறிய கருத்துடையவர்களாய் இருக்கின்றோம் என்ற புரிந்து கொள்ளுதலை எதிர்நோக்கிய நிலையில் இருத்தல் என்பது நம்மை ஊக்கமிழக்கச் செய்யக் கூடும், ஆனால் எல்லா ஞானமும் தவறின்மையும் கொண்ட ஒரு மேய்ப்பரை நாம் பெற்றுள்ளோம் என்ற புரிந்துகொள்ளுதலானது நமது ஏமாற்றத்தை நமக்குள்ளாகவே இயேசுவுடன் உள்ள உறவை முடிவற்ற வகையில் பாராட்டும் செயலுக்கு மாற்றுவதில் நம்மை வழி நடத்துகின்றது. நமது மிகவும் அவசியமான தேவையானது நமது சர்வ வல்ல, சகல ஞானமுள்ள தலைவரால் தரப்படுகின்றது.

## கிறிஸ்து சபையை நேசிக்கின்றார்

மூன்றாவதாக, இந்த ஒப்புவமையானது கிறிஸ்துவை, சபையின்மீது அன்புகூர்ந்து அதற்காகத் தம்முடைய ஜீவனையே கையளித்த ஒரு நல்ல

மேய்ப்பனாகச் சித்தரிக்கின்றது. அவர் ஆடுகளின்மேல் அக்கறை செலுத்திக் கவனிக்கின்றார், மற்றும் தமது ஜீவனைப் பலியாகத் தரும் செயலால் அவைகளைப் பாதுகாப்பார். இயேசு பின்வருமாறு கூறினார்:

> நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப் போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக் கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப் பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன் (யோவா. 10:11-15).

நல்ல மேய்ப்பர் என்ற வகையில் இயேசு, இரு வகையான மேய்ப்பர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் நிற்கின்றார். முதலாவது, அவர் ஒரு கூலியாள் போல, தனது பணியினால் என்ன ஈட்ட முடியுமோ அதற்கு மட்டுமே பணியாற்றுகின்ற ஒரு மேய்ப்பனைப் போல இருப்பதில்லை. கூலியாள் கூலிக்காகவே வேலை செய்கின்றான்; அவன் தனது கடமையைச் செய்வதற்குக் கூலி கொடுக்கப்படுகின்றது. அவன் பொல்லாங்கானவனாகவோ அல்லது துன்மார்க்கனாகவோ இல்லா திருந்தும், ஒரு உண்மையான மேய்ப்பன் ஆடுகளின் மேல் கொண்டுள்ள அக்கறையை அவன் கொண்டிருப்பதில்லை. அவனது கடமை நிறைவேறிவிட்டதென்றால், அவன் ஆடுகளின்மேல் மற்ற கட்டுப்பாடு எதுவும் அற்றவனாகி விடுகின்றான். இரண்டாவது, இயேசு சுயநல விஷயங்களுக்காகத் தனது பணியை நிறைவேற்றத் தவறிய உண்மையற்ற மேய்ப்பனைப் போல் இருப்பதில்லை. எசேக்கியேல் தேவனுக்காகப் பேசிய போது உண்மையற்ற மேய்ப்பனைப் பற்றி விரிவான மொழிநடையில் எழுதினார்:

> நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்டவைகளைக் குணமாக்காமலும், எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும், துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டு வராமலும், காணாமற் போனவைகளைத் தேடாமலும் போய், பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள். மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டு போயின; சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சகல மலைகளிலும், உயரமான சகல மேடுகளிலும் அலைப்புண்டு, பூமியின் மீதெங்கும் என் ஆடுகள் சிதறித் திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை (எசே. 34:4-6).

இந்த மேய்ப்பர்களில் இருந்து இயேசு மாறுபட்டவராய் இருக்கின்றார். அவர் “நல்ல” மேய்ப்பராக இருக்கின்றார். “நல்ல” என்பதற்கு இயேசு

பயன்படுத்திய சொற்றொடரானது பெரும்பாலும் “அழகிய” என்பதைப் போல உள்ளது. அவர் அழகிய மேய்ப்பராக இருக்கின்றார். ஊழியம் செய்ய அவருக்குக் கூலி கொடுக்கப்படுவதில்லை, ஆனால் அவர் ஆடுகளின்மீது அன்புகூர்ந்ததினால் ஊழியம் செய்வதற்கு தம்முடைய ஜீவனைக் கிரயம் கொடுத்தார். அவைகளின் பாதுகாப்பிற்காக அவர் தம்முடைய உயிரின் இரத்தத்தைக் கிரயம் செலுத்தினார். அபாயமானது பயமுறுத்தும் பொழுது - ஒரு ஓநாய் அல்லது சிங்கமானது மந்தையைத் துன்புறுத்த வருகின்ற பொழுது - அவர் அத்துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக ஒளிந்து கொள்வதில்லை. அவர் தம்முடைய ஜீவனுக்கு முன்னதாக ஆடுகளின் ஜீவனையும் பராமரிப்பையும் முதலிடத்தில் வைக்கின்றார்.

இயேசு தம்முடைய பிதாவுடன் கொண்டிருந்த யோவான் 10:14, 15ன்படியான ஒருமைப்பாடு மற்றும் பொதுத்தன்மையுடைய நெருக்க மான, அன்புமிக்க உறவைப் போன்றதொரு உள்ளார்ந்த உறவைத் தம்முடைய ஆடுகளுடன் கொண்டிருக்கின்றார். அவர் தம்முடைய ஆடுகளுடன் தாம் கொண்டுள்ள உறவை அறியப்படுத்துவதற்கு “அறிதல்” என்ற வார்த்தையை இந்த இரண்டு வசனங்களில் நான்கு முறை பயன்படுத்தினார். இருள் மற்றும் வெளிச்சம், வியாதி மற்றும் ஆரோக்கியம், அபாயம் மற்றும் சமாதானம் ஆகிய நிலைகளில் அவர் தம்முடைய ஆடுகளுடன் நிற்கின்றார். அவர் தம்முடைய ஆடுகளைத் தனிப்பட்ட வகையில் அறிகின்றார். ஒவ்வொரு ஆடும் அவருடைய நிலையான கவனிப்பு, அன்பு மற்றும் அக்கறை ஆகியவற்றைப் பெறுகின்றன. அவர் தம்முடைய ஆடுகளை உற்சாகப்படுத்துகின்றார், அவைகளைப் பராமரிக் கின்றார் மற்றும் அவைகளை மென்மையாகக் கவனிக்கின்றார்; அபாய நேரத்தில் அவர் தம்முடைய பலத்தினால் அவற்றைக் காத்துப் பேணுகின்றார்.

ஒரு அணை உடைந்த பிறகு வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பகுதியில் அகப்பட்டுக் கொண்ட வயதான ஒரு தம்பதியரைப் பற்றிய கதையொன்று கூறப்படுகின்றது. தண்ணீர் உயர்ந்து கொண்டிருந்தது, மீட்புப்பணிகள் நடந்து கொண்டிருந்தன. சூழ்ந்துள்ள தண்ணீரானது உயரமான இடத்திற்குச் செல்வதை மிகவும் முக்கியமான காரியமாக்கிற்று. ஒவ்வொரு நிமிடமும் விலையேறப் பெற்றதாயிருந்தது. அந்த முதிய தம்பதியர் உதவி வருமென்று தங்கள் வீட்டுக் கூரையின் மேல் ஒன்றாகக் காத்திருந்தனர். மீட்புப் படகொன்று வந்த பொழுது அதில் ஒருவருக்கு மட்டுமே இடம் இருந்தது. கணவர் தம் மனைவியை மீட்டுச் செல்லும்படி வலியுறுத்தினார், ஆனால் மனைவியான அப்பெண்மணி பிடிவாதமாக மறுத்து விட்டார். அபாயத்தைப் பொருட்படுத்தாது அவர் தம் கணவருடனே இருந்துவிட விரும்பினார். நேரம் வீணாக்கப்படக் கூடாதிருந்தது; தண்ணீர் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. மீட்புப் படகின் பொறுப்பாளராயிருந்தவர், “நான் இந்தப் பயணிகளை விரைவாகப் பாதுகாப்புள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லுகிறேன். உங்கள் இருவருக்காகவும் வேகமாகத் திரும்பி வருவேன். நான் அதைச் செய்ய முடியுமென்று நான் நம்புகின்றேன், ஆனால் நாம் ஒரு பெரிய இடர்ப்பாட்டை மேற் கொள்ளுகின்றோம். தண்ணீர் மிக

வேகமாக உயர்ந்து கொண்டு வருகிறது" என்று அவர்களுக்குக் கூறினார். அவர் உயர்ந்த தரைப் பகுதிக்குச் சென்று மற்ற பயணிகளை இறக்கி விட்டு, மீண்டும் திரும்பி வந்தார், ஆனால் பாய்ந்து விரைந்த தண்ணீரினால் அந்த வீடும், அந்தத் தம்பதியரும் மூழ்கடிக்கப்பட்டிருந்ததையே அவர் கண்டார். இந்த அன்பான துணைவியார் தாமும், தம் கணவரும் ஒன்றாய் மரிக்கப் போகிறோம் என்பதை அறிந்திருந்தும், தம் கணவருடனே கூட இருந்து விட்டார். இதைக் காட்டிலும் பெரிய அன்பு ஏதாவது இருக்கின்றதா? "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவா. 15:13). மற்றவர்கள் வாழ்வதற்காகத் தாம் மரிப்பது என்பது எல்லாவற்றிலும் மாபெரும் அன்பாக உள்ளது. நமது மேய்ப்பர் இவ்வகையான அன்பை, ஆழமான வகையைச் சேர்ந்த அன்பை, மரணத்தைக் காட்டிலும் பலத்த அன்பை உடையவராய் இருக்கின்றார். அவர் ஆடுகளுக்காகத் தம்முடைய ஜீவனையே கையளித்தார் (எபே. 5:25).

யோவான் சுவிசேஷமானது முதல் நூற்றாண்டின் முடிவில், ஒருவேளை கி.பி. 85-95ல் எழுதப்பட்டிருக்கலாம், என்பதை அனைத்து ஆதாரமும் சுட்டிக்காட்டுகின்றது. ஆகையால், அதன் முதல் வாசகர்கள், இயேசு தம்முடைய ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக் கையளிப்பதாகக் கூறியிருந்ததை அறிந்ததோடு, அவர் உண்மையிலேயே அவ்வாறு செய்திருந்ததையும் அறிந்திருப்பார்கள். சபைக்காக அவர் மரித்ததின் மூலம் அவர் தம்முடைய ஆடுகளுக்காக அக்கறைப்படுவதன் நிறைவான விளக்கத்தை வெளிப்படுத்தினார்.

இந்த உண்மையானது நம்மை எவ்வளவாய் இழுத்துக் கட்ட வேண்டும்! நம்மை வழி நடத்துகின்ற சர்வ வல்லமையுள்ள கர்த்தர் ஒருவரை நாம் பெற்றுள்ளோம். நம் ஒவ்வொருவரிலும் அவர் அன்பு கூருகின்றார், மற்றும் அவருடைய வழிநடத்துதலை மட்டுமின்றி, அவரது அன்பையும் பாதுகாப்பையும் கூட நமக்கு வாக்களித்திருக்கின்றார். பவுல், "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:10) என்று கூறினார். நாம் நமது பாவங்களில் இருக்கையிலேயே இயேசு நமக்காக மரிக்குமளவுக்கு நம்மேல் அன்பு கூர்ந்தாரென்றால், இப்பொழுது அவருக்காக வாழவும், அவருடைய ஆடுகளாய் இருக்கவும் நாம் முயற்சி செய்கின்ற இந்த வேளையில் அவர் நமது இரட்சிப்புக்காக எவ்வளவு அதிகமாய்க் கண்ணோக்குவார்?

## முடிவுரை

யோவான் 10ல் கிறிஸ்துவின் ஒப்புவமையானது சபை கிறிஸ்துவின் மந்தையென்றும், அதில் உள்ள ஆடுகள் யாவும் அவரைச் சார்ந்தது என்றும் அறிவிக்கின்றது. அவர், "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்,

அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்” (யோவா. 10:16) என்று உரைத்தார். “வேறே ஆடுகள்” என்று அவர் குறிப்பிட்டது அவரது குரலைக்கேட்டு அவருடைய மந்தைக்குள் வந்து சேரும் புறஜாதியாராக இருக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் அவர்களை உள்ளடக்குவதாக இருக்க வேண்டும். அவரது ஒப்புவமையானது ஒரே மந்தையையும் ஒரே மேய்ப்பரையும் உடையதாகும். ஒன்று நாம் அவரது மந்தையில் ஒரே மேய்ப்பரின் கீழ் இருக்கின்றோம் அல்லது அவ்வாறு இல்லாதிருக்கின்றோம். ஒன்று நாம் அவரது சபையில், புதிய ஏற்பாட்டின் சபையில் இருக்கின்றோம் அல்லது அவ்வாறு இல்லாதிருக்கின்றோம்.

மந்தை/மேய்ப்பர் என்ற இந்த ஒப்புவமையானது நமது பயங்களை அமர்த்தி, நமது கவலைகளை ஓட்டி விடுகின்றது என்பதே இதன் நடைமுறை மறைமுகக் கருத்துக்களில் ஒன்று ஆகும். நாம் அவருடைய ஆடுகளாய் இருப்பதால் நாம் யாரென்று அறிகின்றோம்; நாம் அவருடைய குரலினால் வழி நடத்தப்படுவதால் என்ன செய்ய வேண்டுமென்று அறிகின்றோம்; அவரது வாழ்வினாலும் மரணத்தினாலும் நாம் பாதுகாக்கப் பட்டுள்ளதால் நமது எதிர்காலம் பாதுகாப்பாக உள்ளது. அவர் நமது கர்த்தராய் இருப்பதால் நாம் சார்ந்திருக்கும் உணர்வொன்றைப் பெற்றுள்ளோம்; பரலோகத்தின் கர்த்தர் நமது தலைவராய் இருப்பதால் நாம் உண்மையான அறிவைப் பெற்றுள்ளோம்; மற்றும் தம்முடைய ஜீவனை நமக்காகக் கையளிக்கச் சித்தமான சர்வ வல்லமையுள்ள கிறிஸ்துவிடமிருந்து பரலோகத்தின் பராமரிப்பை நாம் பெற்றுள்ளோம்! நாம் யார் என்பதையும், தவறற்ற வழி காட்டுதல் பெற்றுள்ளதையும், மற்றும் கிறிஸ்துவின் தியாகம் நிறைந்த பாதுகாப்பை நாம் பெற்றுள்ளதையும் நாம் அறிந்திருந்தால், நாம் ஏன் பயப்பட வேண்டும்? நமது மேய்ப்பரின் மேல் உள்ள விசுவாசமானது நமது பயங்களைத் தள்ளி விடுகின்றது.

மோசேயின் யுகத்தில் தேவனைப் பற்றி தாவீதினால் சங். 23 எழுதப்பட்டிருந்தாலும் அதன் வசனங்களை இயேசுவுக்குத் தக்க வகையில் நாம் நடைமுறைப்படுத்த முடியும்:

> [இயேசு] என் மேய்ப்பராயிருக்கிறார்;
> நான் தாழ்ச்சியடையேன்.
> அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து,
> அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு
> போய் விடுகிறார்.
> அவர் என் ஆத்துமாவைத் தேற்றி,
> தம்முடைய நாமத்தினிமித்தம்
> என்னை நீதியின் பாதைகளில் நடத்துகின்றார்.
>
> நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்
> பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட
> இருக்கிறீர்;
> உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

*என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு*
*ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி,*
*என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்;*
*என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.*
*என் ஜீவனுள்ள நாளெல்லாம்*
*நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்;*
*நான் [நல்ல மேய்ப்பர், என் இரட்சகரோடு]*
*நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு நான் மிகவும் இளம் பிரசங்கியாக இருந்த பொழுது, கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர் ஒருவரின் அடக்க ஆராதனையில் கலந்து கொண்டேன். அந்த அடக்க ஆராதனையில் உரையாற்றிய சுவிசேஷப் பிரசங்கியார் மாம்சப் பிரகாரமாக எனது சகோதரராய் இருந்தார். என் நினைவில் உள்ளபடி, மரித்த அந்த மனிதர் தனது மரணத்தின் போது தனது நாற்பதுகளின் வயதில் இருந்தார். எனது சகோதரர் தனது குறிப்புரையில், இந்தக் கிறிஸ்தவ மனிதர் மரிக்கும் முன்பு கூறிய கடைசி வார்த்தைகளை எடுத்துரைத்தார். அவர் மிக மெதுவாக சங்கீதம் 23ஐ மனப்பாடமாகக் கூறியதாகவும், அந்த சங்கீதத்தின் கடைசி வார்த்தையானது மெதுவாய்க் கூறப்படுகையில் அவர் மூச்சு விடுதல் நின்று போனதாகவும் என் சகோதரர் குறிப்பிட்டார். அவரது வாழ்வின் கடைசி வேளையில் சங். 23ஐ மனப்பாடமாய்க் கூறுவதில் அவர் ஆறுதல் அடைந்தார்.*

*தேவனை நமது மேய்ப்பராக ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது, கலக்கமும் பயமும் நிறைந்த இருதயங்களில் சமாதானமும் அமைதியும் பிரவேசிக்கின்றன. இயேசுவை நல்ல மேய்ப்பராகவும், அவருடைய பின்பற்றாளர்களை அவருடைய ஆடுகளாகவும் சித்தரிக்கின்ற இந்த ஒப்புவமையானது இதே வகையான வழியில் நமது ஏக்கங்களின் மீது ஊழியம் செய்ய முடியும்.*

*நீங்கள் கிறிஸ்துவின் மந்தையில் இல்லாதிருந்தால், ஒரே வாசலான - கிறிஸ்துவின் மூலமாக அவருடைய மந்தைக்குள் நீங்கள் உட்புக வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள். இதே வகையான ஒரு சிறிய ஒப்புவமையை (யோவா. 10:7-9) கிறிஸ்து தமது விபரமான நீண்ட ஒப்புவமையின் மத்தியில் வைத்தார் (யோவா. 10:1-5, 10-18). அவர், "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா. 10:9) என்றுரைத்தார். பிற்பாடு அவர், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6) என்று உரைத்தார். கிறிஸ்துவின் மந்தைக்குள் கிறிஸ்துவின் மூலமாகவே உட்புக முடியும், இது ஒருவர் கிறிஸ்துவின் வசனங்களுக்குக் கீழ்ப்படியும்பொழுது நடைபெறுகின்றது (யோவா. 8:24; லூக். 13:3; மத். 10:32, 33; மாற். 16:16).*

*நல்மேய்ப்பராகிய கிறிஸ்துவினிடத்திற்கு வாருங்கள். அவருடைய மந்தைக்குள் பிரவேசித்து, உங்கள் வாழ்வின் மேய்ப்பராய் இருக்கும்படி அவரை அனுமதித்து, அவர் அருளுகின்ற பரிபூரண வாழ்வில் பங்கேற்றுக்*

கொள்ளுங்கள் (யோவா. 10:10). அவருடைய மந்தையில் நீங்கள் இரட்சிப்பையும் (யோவா. 10:9), பரிபூரண வாழ்வையும் (யோவா. 10:10), பயத்திலிருந்து விடுதலையையும் (யோவா. 10:12), அன்பையும் (யோவா. 10:15), வழிகாட்டுதலையும் (யோவா. 10:4, 5) மற்றும் நித்திய ஜீவனையும் (யோவா. 10:17) பெறுவீர்கள். கிறிஸ்துவின் மந்தையில் ஒரு ஆடாக வாழ்வதைக்காட்டிலும் மேன்மையான ஒரு வழியை நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா?

---

குறிப்பு

[1]இயேசுவின் ஒப்பிட்டு விளக்குதலை, யோவான் ஒரு "நீதிமொழி" என்று அழைத்தார். அவர் உபயோகித்த வார்த்தை *paroimia* என்பதாகும், புதிய ஏற்பாட்டின் சில மொழிபெயர்ப்புகள் இதை "உவமைகள்" என்று மொழிபெயர்த்து இருக்கின்றன; ஆனால் "உவமை" என்பதற்குரிய புதிய ஏற்பாட்டு கிரேக்க வார்த்தை *parabole*, இது முற்றிலும் வித்தியாசமான வார்த்தையாய் இருக்கிறது. கர்த்தரின் ஜீவியத்தை விளக்கம் அளிக்க யோவான் ஒருபோதும், *parabole* என்ற வார்த்தையை உபயோகிக்கவில்லை. மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா *paroimia* என்ற வார்த்தையை ஒருபோதும், உபயோகித்ததில்லை. யோவான் உபயோகித்த வார்த்தையின் வெளிச்சத்தின்படி, இயேசுவின் விளக்கம் அல்லது ஒப்பிட்டு விளக்குதல், என்பது நீட்டிக்கப்பட்ட நீதிமொழி மாதிரி ஒரு எளிமையான ஒப்பிடுதல் என்பதற்கு பதிலாக, மறைப் பொருளான கூற்றுக்கள், சுருக்கமான எண்ணங்கள் நிறைந்தனதாக காணப்பட வேண்டும்.

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. நீங்கள் ஊக்கமிழந்து போகும் பொழுது நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?
2. யோவான் சுவிசேஷத்தில் எத்தனை உவமைகள் தரப்படுகின்றன?
3. சபையின் கர்த்தராகக் கிறிஸ்து இருத்தல் நமக்கும் அவருக்கும் அர்த்தப்படுத்துவது என்ன என்பதை விவரிக்கவும்.
4. கிறிஸ்து தம்முடைய மந்தையைப் பராமரிக்கின்றார் என்ற உண்மையானது உங்களை எவ்விதம் ஊக்கப்படுத்துகின்றது?
5. யோவான் 10:10ன் சந்தர்ப்பப் பொருளையும் குறிப்பிட்ட அர்த்தத்தையும் கலந்துரையாடவும்.
6. ஆடுகளை தங்களையே வழி நடத்திக் கொள்ள இயலாமைபற்றி விவரிக்கவும்.
7. ஒரு மேய்ப்பர் தமது ஆடுகளுக்கு எவ்விதத்தில் தலைமைத் துவத்தை/முன்னோடித்துவத்தை அளிக்கின்றார்?
8. தெய்வீக வழிநடத்துதலை மறுக்கின்ற மக்கள் பெறப்போகும் எதிர்காலத்தின் வகை என்ன?
9. "கூலியாள்" என்பவனைப் பற்றி விவரித்து, அவனை ஒரு நல்ல

மேய்ப்பனோடு ஒப்பிடவும்.

10. எசே. 34:4-6ல் சித்தரிக்கப்பட்டபடியாக உண்மையற்ற மேய்ப்பனின் குணங்களைத் தரவும்.
11. யோவான் 10ல் ''அறிதல்'' என்ற வார்த்தையின் பயன்பாட்டை உற்று நோக்கவும், மற்றும் இந்த வார்த்தையின் அர்த்தத்தின் மீது விளக்கம் தரவும் (வசனங்கள் 14 மற்றும் 15ஐக் கவனிக்கவும்).
12. யோவா. 10:16ன் "வேறே ஆடுகள்" யார்?
13. தனிநபர் ஒருவர் கிறிஸ்துவின் ஆடுகளில் ஒன்றாக எவ்விதம் ஆகின்றார்?